செ.வெ.எண். 39 நாள்: 14.09.2017

**திருநெல்வேலி அண்ணா விளையாட்டரங்கில் சர்வதேச இளைஞர் தினத்தையொட்டி ‘‘மினி மாரத்தான்’’ போட்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்**

திருநெல்வேலி அண்ணா விளையாட்டரங்கில் சர்வதேச இளைஞர் தினத்தையொட்டி மாவட்ட எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அலகின் சார்பில் ‘‘மினி மாரத்தான்’’ போட்டிகள் இன்று (14.09.2017) நடைபெற்றது. கல்லூரி மாணவர்கள் மற்றும் மாணவிகளுக்கான ‘‘மினி மாரத்தான்’’ போட்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

திருநெல்வேலி மாவட்டத்தில் சர்வதேச இளைஞர் தினத்தையொட்டி, மாவட்ட எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அலகின் சார்பில், 5 கி.மீ தூரம் ஓடும் ‘‘மினி மாரத்தான்’’ போட்டிகள் நடத்தப்படுகிறது. இப்போட்டிகளில், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களைச் சார்ந்த சுமார் 1000 கல்லூரி மாணவ, மாணவிகள் பங்கேற்றுள்ளனர். இளைஞர்களுக்கு எய்ட்ஸ் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும், இரத்தான விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும் இப்போட்டிகள் நடத்தப்படுகிறது. இப்போட்டிகளில் முதல் 3 இடங்களைப் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பதக்கம் மற்றும் சான்றிதழ்களையும், முதல் 10 இடங்களை பெற்றவர்களுக்கு தகுதிச்சான்றிதழ்களையும், பங்கேற்ற அனைவருக்கும் பங்கேற்பு சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றது எனத் தெரிவித்தார்.

‘‘மினி மாரத்தான்’’ போட்டி அண்ணா விளையாட்டு அரங்கில் தொடங்கி மாநகர ஆணையர் குடியிருப்பு, டி.ஐ.ஜி குடியிருப்பு பகுதி வழியாக திருச்செந்தூர் சாலை வரை சென்று அதே பாதையில் மீண்டும் அண்ணா விளையாட்டு அரங்கை வந்தடைந்தது.

இந்நிகழ்ச்சியில் சுகாதாரப்பணிகள் துணை இயக்குநர் மரு.செந்தில்குமார், அரசு மருத்துவக்கல்லூரி துணை முதல்வர் மரு.ரேவதி, மாவட்ட விளையாட்டு அலுவலர் திரு.வீரபத்ரன், மாநகராட்சி நகர் நல அலுவலர் மரு.பொற்செல்வன், மாவட்ட எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அலகு மாவட்ட திட்ட மேலாளர் திரு.அமலவாணன், மாவட்ட விரிவாக்க கல்வி அலுவலர் திரு.அப்துல்காதர், அரசு அலுவலர்கள் மற்றும் கல்லூரி மாணவ,மாணவிகள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு :** செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி